ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2031/9 - 2017 අගෝස්තු 08 වැනි අඟහරුවාදා - 2017.08.08
*2031/9 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் ஆட்சியுரிமை எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் ஜோன் அந்தனி இம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

1. **எடுத்துக் கொள்வதற்கான நோக்கம்.** - குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசன மற்றும் சுகாதார பாதுகாப்பு திட்டத்தின் மலசல குழாய் வழியின் குழாய்களை பொருத்துவதற்காக காணித் துண்டொன்றின் பயன்பாட்டு உரிமையை எடுத்துக் கொள்ளல்.

2. **காணியின் விபரம்** - வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், இல. 837 குருநாகல் நகர மேற்கு கிராம அலுவலர் பிரிவில், மடமேகம (11 ஆம் இலக்க பிரிவின் குருநாகல் நகர எல்லைக்குள்) கிராமத்திலமைந்த, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இல. கேயு/கேஆர்என்/ 2015/ 668 மற்றும் 2015.12.22 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் துண்டுகள் ஏ, பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0119 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் (02) இன் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - தங்கஹகும்புர மற்றும் கலகாவகும்புர - விஸ்தீரணம் : 0.0017 ஹெக்டயார்**
வடக்கு : ஆயுர்வேத வைத்தியசாலை நிலம் ; கிழக்கு மற்றும் தெற்கு : துண்டு பி ; மேற்கு: ஆயுர்வேத வைத்தியசாலை நிலம்.

02. **துண்டு 'பி' - தங்கஹகும்புர மற்றும் கலகாவகும்புர, வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாது - விஸ்தீரணம் : 0.0102 ஹெக்டயார்**
வடக்கு : ஆயுர்வேத வைத்தியசாலை நிலம் ; கிழக்கு : ரீ. ஜே. பீ. சில்வா உரிமை கோரும் தங்கஹகும்புர மற்றும் கலகாவ கும்புர ; தெற்கு : ரீ. ஜே. பீ. சில்வா உரிமை கோரும் தங்கஹகும்புர, கலகாவ கும்புர மற்றும் நகர சபை பாதை ; மேற்கு : துண்டு ஏ.

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,
காணி அமைச்சர்.

எனது இல. : 4/3/9/2015/டபிள்யூஎஸ்/126.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 19.

8 - 754